★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 30 வெள்ளி (14—9—56) ★ ★ வெளியூர் : ஆவணி 31உ சனி (15—9—56) [இதழ் 82

நெய்வேலி திட்டம் : முதல் கட்ட வேலைமட்டும் துவங்கப்படுமாம்

புதுடில்லி, செப். 13—

பலநோக்கு நெய்வேலித் திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 17,22,000 செலவாகுமெனவும் இதற்கு டெல்லி அனுமதி அளித்துவிட்டது எனவும் தெரியவருகிறது.

இந்த முதல் கட்டத்தின்போது, ஆண்டொன்றுக்கு 35 இலட்சம் டன் நிலக்கரி தோண்டுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படுமாம்.

'அடுப்புக்கு நெருப்பாகும் என்று பார்த்தோம்'

'வீட்டைக் கொளுத்தும் தீயாகிவிட்டது'

'காங்கிரசாட்சியின் அலங்கோலம்'

'வெள்ளையர்போன்றே வடவரும் அன்னியரே'

அண்ணா விளக்கம்

"அன்புள்ள தலைவரவர்களே, தோழர்களே! நம் தாயகத்தின் விடுதலைக்காக அரும்பணியாற்றிய தமிழ் வீரர் வ. உ. சிதம்பரனார் அவர்களின் பெயரால் இயங்கி வரும் இம்மன்றம் நான்காம் ஆண்டு விழாவினை இவ்வளவு சீரும் சிறப்புமாக நடத்தி அந்த வீரரின் கொள்கைகள் வெற்றியுறுவதற்கான பணியில் ஈடுபடுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

"எனக்கு முன்புபேசிய எனது நண்பர்கள் வ. உ. சி.யின் தியாகத்தையும், நாட்டின் இன்றைய நிலைமையையும் விளக்கிக் காட்டினர்.

"வ. உ. சி போன்ற பெருமக்கள் அன்று எந்த உரிமைக்காகப் போராடினார்களோ, அந்த உரிமைகள் தமிழ்நாட்டுமக்களுக்குக் கிடைக்கவில்லையே—இதற்குக் காரணம் என்ன என்பதையே அரசியல் விவரம் அறிந்தவர்கள், பழைய காங்கிரஸ்காரர்களில் சிலர் எண்ணிப்பார்க்கின்றனர்—ஏங்கி நிற்கின்றனர்.

"தேர்தல் காலத்துக் காங்கிரஸ்காரர்களுக்கும், ஆளும் வர்க்கத்தினரின் அக்கிரமத்தைத் திரைபோட்டு மறைத்துவரும் திடீர் காங்கிரஸ்காரர்களுக்கும் இதைப்பற்றியெல்லாம் கவலையிருக்காது — கவலையிருக்கவும் முடியாது.

"6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த வெள்ளையர்கள் நம் நாட்டை அடிமைப்படுத்தி இயற்கை வளப்பத்தைச் சுரண்டிச் செல்கின்றனர்; இந்த அக்கிரமங்களைச் சுதந்திர ஆட்சியில் தகர்த்தெறிவோம்; அந்த இயற்கை வளப்பங்களைப் பயன்படுத்தி நம் நாட்டின் தொழில் துறையையும் வாணிபத்தையும் வளர்ப்போம்; அதன் பயனாய் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் தலைகாட்ட முடியாமல் விரட்டியடிப்போம்' என்று காங்கிரஸ் இயக்கம் கூறிற்று—அதன் தலைவர்களும் கூறினர். அந்த நல்ல வாழ்வு, சுதந்திர ஆட்சியில் தங்களுக்குக் கிடைக்குமென்று உண்மையாகவே மக்களும் நம்பினர்; காங்கிரஸ் பேரால் தேர்தலுக்கு நிற்பவர்கள் வெற்றிபெற்றால்—அவர்கள ஆட்சிபீடமேறினால் நம் வறுமையனைத்தும் ஒழியும், என ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் மனதார நம்பினர்; தேர்தல் காலங்களில் காங்கிரஸ்காரர்களுக்குப் பேராதரவையும் தந்தனர்.

" ஆனால், இன்று நாம் காண்பதென்ன? காங்கிரஸ் ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்ததா? உழவர்களுக்கு உரிமையளிக்கப்பட்டதா? ஏழை - எளியவர்கள், குமாஸ்தாக்கள், ஆசிரியர்கள் இவர்களின் தாழ்ந்துள்ள வாழ்வு தலைநிமிர்ந்து நிற்க ஏதாவது செய்யப்பட்டதா? நம் தமிழ்நாட்டின் தொழில் — வாணிபத்துறைகளில் ஏதாகிலும் வளர்ச்சி உண்டா? சுதந்திரம் கிடைத்து ஒன்பதாண்டுகள் ஆகின்றன—அன்று வெள்ளையர் ஆட்சியில் இருந்து வந்த அநீதிகள் இன்று ஓரளவாகிலும் குறைந்திருக்கிறதென்று கூற முடியுமா?

நமது நாடு நமதாக நாமன்றி வேறு யார் பாடுபட முடியும்?

" கப்பலோட்டிய தமிழ் வீரர் சிதம்பரனார் போன்ற தியாகிகள், சுதந்திர ஆட்சியென்பது ஏழை-நடுத்தர மக்களுக்கு வாழ்வளிக்கும் நல் ஆட்சியாக விளங்கும் என்று மனதார எண்ணி அதற்காகவே பெரிதும் பாடுபட்டனர்; காங்கிரஸ்காரர்களில் கண்ணியம் உள்ளவர்கள் கூட இவ்வாறுதான் நம்பி எதிர்பார்த்திருந்தனர்—ஏன் தமிழ் நாட்டு மக்களாகிய நாம் அனைவருமேதான் நம்பினோம்; அந்த நம்பிக்கை இன்று என்ன ஆயிற்று?

" 'அடுப்புக்கு நெருப்பாகும் என்று பார்த்தோம்; ஆனால் விட்டைக்கொளுத்தும் தீயாகி விட்டதே!' என்று மனவேதனையுற்றக் கதைபோலத்தானே காங்கிரசாட்சியின் அலங்கோல நிலை காட்சியளிக்கின்றது.

அது மட்டுமல்ல—அந்த அந்நியர் நல்லவர்களுமல்ல; நம் நாட்டின் வளப்பத்தை அரசியல் அதிகாரத்தால் சுரண்டிச் செல்லும் கொடுமதியாளர்கள்; எனவே வெள்ளையர் ஆட்சிக்கு முடிவுகாண வேண்டுவது நம் அனைவரின் கடமையாகும்,' என்று கூறினர்!

"வெள்ளையர்கள் அந்நியர்கள் என்று எடுத்துக்காட்டப்படுவதற்கு எந்தெந்தக் காரணங்களை கூறினார்களோ அதற்கு மேலாக வடநாட்டினரும் நமக்கு அந்நியர் என்பதற்கு—இன்னும் சொல்லப்போனால் ஆதாரங்களுடன் பலவற்றை நான் எடுத்துக்காட்ட முடியும்.

ணமாக இந்த கிராண்ட் ஹோட்டலுக்கு வருவதாக வைத்துக்கொள்ளுங்கள் ;—என்னைப் பார்ப்பவர்கள், 'என்ன, புதுஆளாய் இருக்கிறதே?' என்று எண்ணி என்னிடம், 'அய்யா, நீர் எந்த ஊர்?' என்று கேட்பீர்கள்; 'நான் இருப்பது காஞ்சி' என்பேன்; 'இங்கு என்ன வேலையோ?' என்று அடுத்த கேள்வி எழும்; 'செங்குன்றம் வந்தேன்; அப்படியே உங்கள் ஜமீன் கிராமத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்,' என்று சொல்லுவேன்; என்னை விசாரித்தவரும், 'ஓ அப்படியா? சரிதான்' என்று கூறுவார்.

"இந்த இடத்தில்தான் நீங்கள்

'நம்மால் ஆகுமா?' என்ற இழுப்புப் பேச்சு வேண்டாம்

"வெள்ளையர் அந்நியர் என்பதற்குக்கூறப்பட்டஇலக்கணம்—'அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் தங்களிடம் குவித்து வைத்துக் கொண்டிருக்கின்றனர்; நமக்குத் தெரியாத—சுலபத்தில் புரியாத தங்கள் மொழியான ஆங்கிலத்தை இந்திய ஆட்சி மொழியாகவும் ஆக்கியிருக்கின்றனர்; இந்தியாவில் கிடைக்கும் மூலப்பொருள்களையெல்லாம், தங்கள் நாடுகளுக்குக் கொண்டுசென்று அவ்விடமிருந்துசோப்பையும் சீப்பையும் மருந்து, மதுவகைகளையும், ஆடையையும் அலங்காரப் பொருள்களையும், பெரும் இயந்திரங்களையும் இதனை இயக்கி வைப்பதற்குக் கொழுத்த சம்பளத்தில் கணக்கற்றவர்களையும் அனுப்பிப் பொருளாதார வேட்டையாடுகின்றனர்; இந்திய மக்களுக்குத் தாழ்வு—இங்கிலாந்து நாட்டினருக்கோ உல்லாச வாழ்வு; இவ்விதமெல்லாம் வெள்ளையர்கள் ஆட்சி முறை இருந்துவருவதால் அந்த ஆட்சியை ஒழித்து இந்திய மக்கள் அனைவரும் சம உரிமையுடன்—சுதந்திரமுடன் வாழ்வதற்கும், நம் நாடு நமதாவதற்கும் அந்நியர்களாகிய வெள்ளையர் ஆட்சி ஒழியவேண்டும்' என்றனர்.

"வெள்ளையர் ஆட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை காங்கிரஸ் தலைவர்களே ஆண்டுதோறும் விழாவின் வாயிலாக நினைவுபடுத்துகின்றனர்.

"தோழர்களே! வெள்ளையர்கள் அந்நியர் என்பதற்குத் தேசியத்

யோசிக்கவேண்டும். அவர் கேட்டதை நான் புரிந்துகொண்டேன்; நான் சொன்னது அவருக்கும் புரிந்தது; காரணம் நான் பேசியது தமிழில்; என்னிடம் பேசியவரும் தமிழர்; எனவே, இந்த இடத்தில் நான் அன்னியன் அல்ல—தமிழன் தான்; ஆனால், வெளியூர்க்காரன்!

"ஆனால்இதேபோல ஒருவடநாட்டுக்காரர் வருவதாக எண்ணிப் பாருங்கள்; அவர் கேட்பது உங்களுக்குத் தெரியாது; நீங்கள் பேசுவதும் அவருக்குப் புரியாது; அவர்கள் பேசுவது இந்தி; நீங்கள் கேள்வி கேட்பதோ தமிழில்! ஆகவே, வடவர் நமக்கு அந்நிய நாட்டுக்காரன் ஆகின்றனர்!

அதுபோலவே வெள்ளையர்கள், இங்குள்ள தொழில்களை நசிக்கச் செய்து தங்கள் நாட்டிலிருந்து விளைபொருள்களை ஏராளமாக இறக்குமதி செய்து வந்தனர். நம் திராவிடத்தில் ஏராளமான பருத்தி விளைந்துங்கூட லங்காஷயரிலிருந்துதான் ஜவுளிகளைக் கொண்டுவந்து குவித்தனர். நமது மாநில மக்கள் செலுத்திவந்த வரிப்பணத்தில் பெரும் பகுதியை—தனது ஏகாதிபத்திய வாழ்வுகளை உலகத்துக்கு வெளிச்சம் போட்டு காண்பிக்கப் பயன்படுத்தி வந்தனர், வெள்ளையர்கள்! இதனால், 'வெள்ளையர் அந்நியர் மட்டுமல்லாது நல்லவர்களுமல்லர்' என்று காங்கிரஸ் தலைவர்கள் சுட்டிக் காட்டி வந்தனர்; நாமும் அதனை மனதார ஒப்புக்கொண்டோம்; ஒப்புக்கொண்டது மட்டுமல்ல—அந்த அந்நிய ஆட்சிப் பிடிப்பிலிருந்து விடபடவேண்டும். என்ற உணர்ச்சியும் கொண்டோம்.

" வெள்ளையரின் ஆதிக்கம் வெளியேறி ஆண்டுகள் ஒன்

திரண்டெழுவீர்! வெற்றி பெறுவீர்!

"இந்தியத் துணைக்கண்டத்தை வெள்ளையர் ஆண்டதை அந்நாளில் காந்தியார் எதிர்த்தார் என்றால், 'வெள்ளைக்காரன் பிடிக்கவில்லை' என்பதற்காகவா? அல்லது, 'நாமெல்லாம் கருநிறம் படைத்திருக்கிறோம்; அவர்கள் வெள்ளை நிறத்தினர்,' என்பதைச் சுட்டிக் காட்டியா?—அல்ல; 'வெள்ளையர் அந்நியர்; அந்த அந்நியர் நம் நாட்டை ஆளுவது அவக்கேடு;

தலைவர்கள் கூறிய இலக்கணத்தை மனதில் வைத்து வடநாட்டுக்காரர்கள் அந்நியர்களா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

'ஒருவன் அந்நியன் அல்லது நம்மவன் என்பதை நிரூபிப்பதற்கு முதல் காரணமாய் இருப்பது மொழிதான்! நான் கூட்டத்திற்காகவராமல் ஏதோ சொந்தக்கார

பது ஆகின்றன ; நாம் சுதந்திர நாட்டில்தான் வாழ்கின்றோமா? உண்மையிலேயே நம் நாடு சுதந்திரம் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை. சரித்திர ஆராய்ச்சிப்படி சிந்தித்துப் பார்த்தாலும் வெள்ளையருக்குப் பதிலாக வேறொரு அந்நியருக்கு நாமும் நமது தாயகமும்

அடிமைப்படுத்தி வைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை நீங்களெல்லாம் நன்கு உணருவீர்கள். அவ்விதம் உணரும்போதுதான், வ.உ. சிதம்பரனார் அவர்களின் மகத்தான பணி, இன்று ஆட்சி பீடத்தில் வீற்றிருப்போரால் எவ்வளவு சாதாரணமாக மதிக்கப்பட்டு வருகிறது என்பதையும் உணர முடியும்.

"வெள்ளையர்களைப் போலவே வடநாட்டுக்காரர்கள், அரசியல் அதிகாரத்தால் ஆமதாபத்திலிருந்தும், ஷோலாப்பூரிலிருந்தும் ஜவுளிகளை இங்கு கொண்டுவந்திருக்கின்றனர். ஆனால் வெள்ளையராயினும் நிர்வாகத் துறையில் தகுதி பெற்றிருந்தனர்; வடநாட்டுக்காரர்கள் அதற்குக்கூட இலாயக்கில்லையென்பதை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"வெள்ளையர் ஆட்சியின்போது இராணுவத்திற்காக ஆண்டுதோறும் செலவிடப்பட்டது ரூ 90 கோடிதான்; இந்தச் செலவைக்கூட அன்று காந்தியாரும் நேரு பண்டிதர் உள்ளிட்ட பல தேசியத் தலைவர்களும் மிக அதிகம் என்று கண்டித்து வந்தனர் ;

"வெள்ளையர் அந்நியர்; ஆதலாலே நம் வரிப் பணத்தை தங்களின் ஏகாதிபத்தியம் நிலைபெற்றிருக்கச் செய்ய இவ்விதம் செலவு செய்தனர்; - ஆனால், இன்று ஆட்சிபீடத்திலிருப்பவர்களோ தேசியத் தவப் புதல்வர்கள்; வெள்ளையரின் ஆட்சிப்போக்கை வன்மையாகக் கண்டித்தவர்கள்; இவர்கள் ஆட்சியில் சென்ற 9 ஆண்டுகளாக இராணுவத்திற்கு ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து வருகின்றனர்; இந்திய அரசியலாரின் ஆண்டு வருமானத்தில் சரி பகுதி தொகை பட்டாளத்திற்குச் செலவிடப்பட்டு வருகிறது. இவ்வளவு அதிகமான பணத்தைப் பட்டாளத்திற்கு வாரிக் கொடுத்தும் பயன் ஏதாகிலும் உண்டா?

"காஷ்மீர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை; காஷ்மீரில் சரி பகுதி பாகிஸ்தான் வசத்தில் தானிருக்கிறது. அது மட்டுமா? பாகிஸ்தான் படைகள் இந்திய வசமுள்ள காஷ்மீரத்தின் எல்லைக்குள் அடிக்கடி தொந்திரவு செய்வதாக இந்திய அரசியலாரே கூறி ஆயாசப்படுகின்றனர். போர்ச்சுகீசியர் பிடிப்பிலுள்ள கோவாவை மீட்டபாடில்லை; ஆனால பட்டாளத்திற்கு மட்டும் ஆண்டுதோறும் ரூ. 200 கோடி செலவு! ஏழை எளியவர்களின் வாழ்வைச் சீர்குலையச் செய்து இவ்விதம் திறமையற்ற போக்கில் நேரு சர்க்கார் நடந்து வருகிறது!

"ஆதலால்தான், நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன்—எவ்வகையில் பார்த்தாலும் வெள்ளையரைப் போலவே வடநாட்டவர்களும் அந்நியர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14-9-'56 வெள்ளி

மலிந்துவிட்ட ஊழல்கள்

இந்தியத் துணைக்கண்டத்தில் கடந்த ஒன்பதாண்டுகளுக்கு மேலாகவே ஆட்சிப்பொறுப்பிலிருந்து வருகின்றனர் காங்கிரசார். அவர்களது ஆட்சியில் மலிந்துவிட்ட ஊழல்களைத் தாங்கி அவ்வப்போது வெளிவரும் தணிக்கைக்குழு அறிக்கைகள், மக்கள்சபைப் பொதுக் கணக்குக்குழு அறிக்கைகள் எல்லாம் நம்மைத் திடுக்கிட வைக்கின்றன.

காங்கிரசாரின் திறக்குறைவான—தரங்கெட்ட சுயநல நிர்வாகத்தின் விளைவாக, ஊழல்களின் வகையும் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு பலுகிப் பெருகி வருகிற சோகத் தொடர்ச்சியை, அந்த அறிக்கைகள் சித்தரிக்கின்றன. இந்த ஊழல்களால், நாட்டு மக்களின் வரிப்பணம் பலகோடி பாழாகியிருப்பதை அறியும்போது, நாட்டு மக்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்ட எவரது நெஞ்சமும் பதறுமலிருக்க முடியாது.

ஆனல், ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் காங்கிரசாருக்குத் தங்களது நிர்வாகத்தில் மலிந்துவிட்ட ஊழல்கள், நாட்டு மக்கள் முன் அம்பலப்படுத்தப் படும்போது, கிஞ்சிற்றேனும் மனப்புழுக்கம் ஏற்பட்டதாகவோ, வெட்கம் பிறந்ததாகவோ தெரியவில்லை.

மாருக, 'இவ்வளவு பெரிய இராஜ்ய பாரத்தை எங்களைத் தவிர வேறெவரால் தாங்க முடியும்?' என்று வீரம் பேசுகிருர்கள். இது வேதனைதரும் போக்காகும்.

ஏழை—எளிய மக்கள் தங்களுடைய உழைப்பின் விளைவுகளை — வருமானத்தைப் பல துறை மோசடிகளுக்கும் கொள்ளைகளுக்கும் இலக்காக்கி விடுகின்றனர். அப்படி மக்களிடமிருந்து கொள்ளையடிக்கும் தியசக்திகளுள் சர்க்காரும் ஒன்ருக இருக்கிறது. சர்க்கார், விரிவாக்கி, பளுவாக்கிவரும் வரி விதிப்பைக் கொள்ளை என்று கூறுவது பொருந்தும் என்றே நம்புகிறேம். இப்படிக் கட்டாயமாக நாட்டு மக்களை வாட்டி வதைத்துப் பெருமளவில் அவர்களின் வருமானத்தை சர்க்கார், வரி என்ற பெயரால் தட்டிப் பறித்துக் கொள்வதற்கு, 'மக்களுக்காகத் தானே சர்க்கார்' என்ற நியாயம் வேறு கூறப்படுகிறது.

மக்களுக்காக என்று கூறி, சர்க்கார், அளவுக்கு மீறி மக்களைத் துன்புறுத்தி, அவர்களிடமிருந்து பணம் உறிஞ்சுவதே கொடுமையானது. அந்தக் கொடுமையைப் புரிந்து சேகரித்தப் பணத்தை நியாயமான செலவுகளுக்குப் பயன்படுத்தாமல் வீரயமாக்குவது அதைவிடக் கொடுமையானது.

டில்லி சர்க்கார், மக்களின் வரிப்பணமாக ஆண்டுதோறும் பெறுகிற சுமார் ரூ. 400 கோடியில் தற்காப்பிற்கு என்று கூறி வளர்க்கப்படும் இராணுவத்திற்குச் செலவிடுவது—சரிபாதிக்கும் மேலாகச் செலவிடுவது நியாயமாகாது என்பதைப் பலரும் எடுத்துரைத்திருக்கின்றனர்.

இந்த அநியாயம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அதுவே மக்களுக்கு இழைக்கப்படும் பெருங் கொடுமையாகும். ஆண்டு தோறும் இருநூறு கோடி ரூபாய்களை விழுங்கிவரும் தற்காப்பு இலாகா, ஊழல்களின் பிறப்பிடமாக இருக்கிறது என்று நேற்று முன்தினம் மக்கள் சபையில் தாக்கலான பொதுக்கணக்குக்குழு அறிக்கை கூறுகிறது.

இராணுவத்திற்கு இப்போது செலவிடப்படும் பெருந்தொகையே அநியாயமானது என்னும்போது—கொடுமை மிகுந்தது என்னும்போது, அந்த இராணுவ இலாகா மக்களின் வரிப் பணத்தில் பலஇலட்சம் ரூபாய்களைப் பாழாக்குவதானது கொடுமையிலும் கொடுமையாகும்.

1951-ம் ஆண்டில் நடைபெற்ற ஊழல்கள் 1956-ம் ஆண்டில்தான் அம்பலமாகின்றன. அதாவது மக்கள் சபை பொதுக் கணக்குக் குழுவினர் கண்டுபிடித்து வெளியிட்ட பின்னர்தான் தெரிய வருகின்றன. ஆனல் இந்த ஊழல்கள், இலாகாவினருக்கு ஊழல் நடைபெற்ற சிறிது காலத்திற்குள் தெரியாமல்போக நியாயமில்லை. அப்படித் தெரிந்திருந்தும், ஊழல்களை மக்கள் கண்ணிலிருந்து மறைத்துவிட நினைத்துத்தான் இலாகாவினர், எவராவது கண்டுபிடிக்கும் வரையில் மூச்சுப் பேச்சற்றிருந்தனரா? அப்படியானல் அது இரட்டைத் தண்டனைக்குரிய குற்றம் என்பதை பாரத மாதாவின் தவப்புதல்வர்கள் உணர்ந்தாக வேண்டும்.

மேலும், நிகழ்ந்த ஊழல்கள் பற்றிய தகவல்கள்தான், காலங் கடந்தேனும் கிடைக்கின்றனவே தவிர, இந்த ஊழல்களுக்கு மக்களின் வரிப் பணத்தில் பல இலட்சம் பாழான கொடுமைக்கு காரணமாயிருந்தவர்கள் எவர் எவர் என்பது பற்றியோ, அவர்களைத் தண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியோ தகவல்கள் கிடைப்பதில்லை. இந்தத் தகவலையும் அறிந்துகொள்ள மக்களுக்கு நிச்சயம் உரிமை உண்டு.

பாரெல்லாம் சென்று, ஊரெல்லாம் சுற்றி உபதேசம் புரிந்துவிட்டுத் திரும்பிவந்து, ஊரெல்லாம் பாரெல்லாம், பாரதத்தின் புகழ்பாடுகிறது. கேண்மின்—என்று கூறித் திரியும் பாரதத்தின் தவப்புதல்வர்கள், இந்தஊழல்களைத் தோளில் சுமந்துகொண்டிருக்கிறேமே என்ற கவலையற்றிருப்பது கண்டு, வெட்கத்தால் தலை குனியாமலிருப்பது கண்டு, தெளிவுபெற்ற மக்கள் சிரிக்கிருர்கள். காலம் வரும்போது, பெரிய மனிதர்களின் இந்தப் போக்கு நீடித்தால் சீறி எழுவார்கள் என்று எச்சரிக்கிறோம். ஊழல்கள் தொடராமலிருக்கஉடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் ஊழல்களுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துக் கடுந் தண்டனைக்கு ஆளாக்கவேண்டும் என்று கோருகிறோம்.

மகா குசராத் கோரி கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்!

பதவியைத் துறக்கும்படி மாவட்டக் கழகத் தலைவருக்கு வற்புறுத்தல்

விநயகர் விழாவில் பெருங்குழப்பம்!

கோதாரா, செப் 12—

மகா குசராத் கோரிக்கையின் தீவிரம் இன்னும் தணிந்துவிடவில்லை. எதிர்பார்த்தபடி இருமொழி மாநில அமைப்பு ஏற்பாட்டிற்குப் பேராதரவு ஏற்பட்டுவிடவில்லை.

மகா குசராத் கோருவோரின் ஆர்ப்பாட்டம் வளர்ந்து கொண்டு இருக்கிறது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளாது இருக்க, தேசிய ஏடுகள் எவ்வளவுதான் கட்டுப்பாடாக இருட்டடிப்புச் செய்தபோதிலும், தப்பித்தவறி இரண்டொரு செய்திகள் அம்பலமாகி வருகின்றன.

பஞ்ச் மகால் மாவட்டக் கழகத் தலைவரை ஏறத்தாழ ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு, அவருடைய தலைவர் பதவியைத் துறக்கும்படி வற்புறுத்தினர். பதவியைத் துறக்கமுடியாது என அவர் மறுத்துவிட்டார். அதன் விளைவாக அம்மாணவர் அவர் ஏறிவந்த கார்மீது கல்லெறிந்து ஆர்ப்பாட்டம் செய்ததாகச் செய்தி தரப்படுகிறது.

தயாபாய் நாயக் என்ற பெயரிய அவர், மாராட்டிர மண்டலத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விநயகர் விழாவில் பேசுவதாக இருந்தது. அவருக்கு எதிராக மகா குசராத் கோரி ஆர்ப்பாட்டம் செய்த அம்மாணவர்கள், கூட்டம் நடந்து கொண்டிருக்கும் பொழுது, கருப்புக்கொடி காட்டி முழக்கமிட்டு, அவரைக் கூட்டத்தில் பேசவிடாது தடுத்து விட்டனர்.

கூட்டமும் குழப்பத்தில் முடிந்தது.

கடற்படை ஆராய்ச்சி நிறுவனம்

புதுடில்லி, செப். 13—

பாதுகாப்பு நிறுவனங்களின் முக்கியமான பிரிவுகளில் கடற்படை ஆராய்ச்சி அமைப்பு ஒன்ருகும். இந்த அமைப்புக்கு சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று தெரியவருகிறது. விஞ்ஞானத் துறை முன்னேற்றத்தில் துரித மாறுதல்கள் ஏற்பட்டு வருகிற இக்காலத்தில், கடற் படைப் பிரச்சினைகள் சம்பந்தமான விஞ்ஞான ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைத் தற்கால கடற்படை எதுவும் புறக்கணித்துவிட முடியாது.

கடற்படை விஞ்ஞான அமைப்பு சிறந்த முறையில் வேலை துவங்கியிருக்கிறது. இரசாயன ஆராய்ச்சிக்காகப் பம்பாயில் ஒரு நிலையமும், பௌதிக ஆராய்ச்சிக்காகக் கொச்சியில் ஒரு நிலையமும் இயங்கி வருகின்றன.

கடற்படைக் கப்பல்கள் போக்குவரத்து, கரை அமைப்பு வேலை ஆகியவை பற்றிய பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

காரணம் கூறுவதிலேயே

காலம் கடத்துகிருர்கள்

புதுடில்லி, செப். 12—

உணவுத் தானியங்கள் விலை, விஷம் போல் ஏறிவருவதற்கு மாநில, மத்திய ஆட்சியிலிருக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான காரணங்களைக்கூறி வருகின்றனர் அல்லவா?

இப்போது, நிதிமந்திரியாயிருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரி வேறு அவர் பங்காகக் காரணங்களைக் கூறியிருக்கிருர்.

1. உணவு உற்பத்தி ஓரளவு குறைந்தது. 2. அபிவிருத்திச் செலவு அதிகரித்திருப்பதற்கு ஒப்ப, அதிகரித்திருக்கும் மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பது 3. கொள்ளை இலாபமடிப்பதற்காக உணவுப் பண்டங்கள் பதுக்கி வைக்கப்படுவது.

இவை மூன்றும்தான், விலை ஏற்றத்திற்குக் காரணம் என அவர் சாதிக்கிருர்.

அம்பட்டன் வாராவதி!

சென்னை, செப். 12—

ஹாமில்டன் வாராவதியாக இருந்தது நாளடைவில் 'அம்பட்டன்வாராவதி' என மருவி 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது விந்தையானதல்லவா? சர்க்கார் இப்போது அம்பட்டன்வாராவதி என்பதை மாற்றி மீண்டும் ஹாமில்டன் வாராவதி என்றே அழைக்கவேண்டுமென உத்தரவிட்டிருக்கின்றனராம்.

அரசியல் சட்டத்திற்கு அவசர அவசரமான திருத்தங்கள்

அதன் புனிதத் தன்மையைக் குறைக்கும்

அரசியல் கட்சிகளை அடக்கி ஒழிக்க முற்படுவதே சர்வாதிகாரத்தின் முதற்படியாகும்

தேர்தல் ஆணையாளர் சுகுமார்சென் கருத்து

சென்னை, செப். 12—

"அரசியல் சட்டமென்பது மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஒப்பத் திருத்திக்கொள்ளப்பட வேண்டியது தான் என்ருலும், பதவியிலிருக்கும் கட்சியினர், பெருவாரியானவர் விருப்பம் எனறுகூறி அவசரக் கோலமான திருத்தங்களுக்கு ஆட்படுவதாக இருத்தலாகாது. அதுபோன்று கொணரப்படும், அவசர அவசரமான திருத்தங்கள், அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மையை மக்கள் முன் குறைத்துக் காட்டுவதாகும். மேலும் தேசீய ஐக்கியத்தை உருவாக்குவதையும் அந்தத் திருத்தங்கள் கடினமாக்கிவிடும்,"

என்று, தலைமைத் தேர்தல் ஆணையாளரான சுகுமார்சென், சென்னைப் பல்கலைக் கழகக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

'ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்குப் பொதுப் பணியிலிருப்போர் நாட்டுக்கு விசுவாசம் காட்டுபவர்களாகவும் கண்ணியம் மிக்கவர்களாயுமிருக்க வேண்டுமென்பது அவசியமாகும். நவீன காலத்தில் அரசாங்கத்தின் பொறுப்புகள் பலுகிப் பெருகியுள்ளன. சிவில் ஊழியர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வளர்ந்தவண்ணமுள்ளன.

"சர்க்கார் ஊழியம் புரிவோர், எந்தவிதமான பாகுபாடு காட்டுபவர்களாகவும், சுயநல உணர்வு கொண்டவர்களாகவும் இருத்தலாகாது. மேலும் அதிகாரத்திலிருப்போர் அல்லது அரசியல் கட்சியினர் இவர்களின் செல்வாக்குக்கு கட்டுப்பட்டவர்களாகவும் சர்க்கார் ஊழியர்கள் இருத்தலாகாது.

"சர்க்கார் ஊழியத்திற்கு ஆள் பொறுக்கும் வேலை, சுதந்திரமான ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் படுதல் வேண்டும். அந்த நிறுவனம் பாரபட்சம், ஓரவஞ்சனை இவற்றிற்கு இடமளிக்காமலிருக்க வேண்டும். பழி வாங்கப்படுவதிலிருந்தும் ஊழியக் கால வரம்பு குறித்தும் ஊழியர்களுக்கு நியாயமான பாதுகாப்பு வேண்டும்.

"கட்சி அரசியலில் சர்க்கார் ஊழியர்கள் ஈடுபட்டுவிட்டால், ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்தாகிவிடும். சர்வாதிகாரத்திற்குக் கதவு திறக்கப்படும்.

"கட்சி அரசியல் முறை ஜனநாயகத்திற்குத் தவிர்க்க முடியாத ஒன்ருகும். சட்டரீதியாக வேலை செய்துகொண்டிருக்கும் அரசியல் கட்சிகளை அழித்து ஒழிக்க முற்படுவதுதான், சர்வாதிகாரத்தின் முதற்படியாகும். இது ஒரு ஜனநாயக நாட்டில் அனுமதிக்கப்படக் கூடாத ஒன்ருகும்."

பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படும்?

ஏற்கனவே திட்டமிட்டுள்ளபடி 1957 பிப்ரவரி மார்ச் திங்களில் பொதுத் தேர்தல்கள் நடைபெறுமா என்பதில், மைசூர் சர்க்கார்வட்டாரத்தில், பொறுப்பானவர்களிடமிருந்து சந்தேகம் கிளம்பியிருப்பதாக செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

உணவுத் தானியங்கள் இறக்குமதி

புதுடில்லி, செப். 10—

இந்தியா இவ்வாண்டு கடைசிக்குள் வெளிநாடுகளிலிருந்து 18,00,000 டன் உணவுத் தானியங்களை—அதாவது 13,40,000 டன் கோதுமையையும், 4,60,000 டன் அரிசியையும் இறக்குமதி செய்யும். கோதுமை ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்தும், அரிசி பர்மா, சீனு, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தத் தானியங்கள் முழுவதையும் இறக்குமதி செய்வதற்கு மொத்தம் 75·25 கோடி ரூபாய் செலவாகும்.

இத்தகவலை யூனியன் உணவு-விவசாய மந்திரி தெரிவித்தார்.

செயற்கைச் சந்திரன்

அமெரிக்க சர்க்காரால் தயாரிக்கப்படும் செயற்கைச் சந்திரன் ஜனவரியில் தயாராகிவிடும் என்று பெர்கின்ஸ் என்பார் லண்டனில் அறிவித்துள்ளார். அடுத்த வருடம் ஜுலை மாதத்தில் அமெரிக்க ஆராய்ச்சியாளர் அதனைப் பயன்படுத்தலாம் என்றும், சுமார் 1,500 மைல் தூரத்தில் பூமியை அது சுற்றிவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நிதி நிறுவனம்

தனிப்பட்ட நிறுவனங்களில் முதலீடு செய்யும்

நியூயார்க், செப். 13—

முன்னேற்றம் குறைந்த நாடுகளில் வர்த்தகப் பிரமுகர்களுடன் கலந்துகொள்ள சுமார் 25 யோசனைகளை உலக பாங்குடன் இணைப்புக் கொண்டுள்ள ஐ. நா. நிதி நிறுவனம் தீவிரமாகப் பரிசிலனை செய்வதுடன் இவ்வாண்டு முடிவுக்குள் நான்கு நாடுகளில் முதலீடுகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றது.

அங்கீகாரம் பெற்ற 10 கோடி டாலர் மூலதனத்துடன் ஜூலை மாதத்தில் இந்த அமைப்பு நிறுவப்பட்டது. உலக பாங்கி அங்கத்தினர்களான 32 நாடுகளின் அரசாங்கங்கள் இதில் 784 இலட்சம் டாலர் அளித்துள்ளன.

“நாங்கள் கடனளிக்கும் ஒரு நிறுவனமல்ல; ஒரு நிறுவனத்தை தொடங்குவதற்கு நாங்கள் உதவியளிப்போம். அது ஆரம்பித்து சுயமாக இயங்கத் தொடங்கினுல் நம் பங்குகளை விற்று முதலீட்டை மாற்றுவோம்” என ஐ. நா. நிதி நிறுவன வேலையைப்பற்றிப் பேசுகையில் அதன் தலைவர் ராபர்ட் எல். கார்னர் கூறினுர்.

அவர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்ததாவது:—

“உலக பாங்கியின் பொருளுதவி பெறக்கூடியவையோ அல்லது அரசாங்க அமைப்பில் இருப்பவையோ ஆன அடிப்படைப் பொது நிலையங்களில், ஐ. நா. நிதி நிறுவனம் முதலீடு செய்யாது. தொழிலியல், விவசாயம், நிதி, வர்த்தகம், மற்ற தனிப்பட்ட வர்த்தக நிலயங்களைத் தான் அது கவனிக்கும்.

“தனிப்பட்ட நிறுவனங்களுடன் முதலீடு செய்வதில் ஐ. நா. நிதி நிறுவனம் துணிவுடன் நடந்து, இலாபமடையவும் எதிர்பார்க்கிறது. பிறகு தன் முதலீடுகளைத் தனிப்பட்ட முயற்சிகளுக்கு விற்று, அந்தப் பணத்தை வேறிடத்தில் முதலீடு செய்யவும் அது விரும்புகிறது.

“ஒரு அமைப்புக்கு நிதி உதவி கோரி கோரிக்கைகள் வந்தால் நிர்வாகத்தையும் முதலீட்டின் பெரும் பாகத்தையும் அளிக்கும் கூட்டாளியின் தரத்தை ஐ. நா. நிதி நிறுவனம் முதன்முதலாகக்கவனிக்கும்.

“புது நிறுவனங்களுக்கு நிதி அளிக்கும்பொழுது ஆரம்பத்தில் குறிப்பிட்ட வருமானம் கிடைக்க வேண்டுமென்பதை நிறுவனம் வற்புறுத்தாது.

“துவக்கத்தில் பெருவாரியான முதலீடுகள் அமெரிக்க டாலரிலேயே குறிப்பிடப்பட்டு அம்முறையிலேயே அளிக்கப்படலாம். ஆனுல் சில துறைகளில் ஐ. நா. நிதி நிறுவனம் மற்ற நாட்டுச் செலாவணியிலும் முதலீடுகள் செய்யும்.”

உலக அணு நிறுவனம்

உருவாக்க 87 நாடுகள் கூடுகின்றன

நியூயார்க், செப் 13—

சர்வதேச சமாதான அணு அமைப்பு பற்றி முடிவான திட்டங்கள் செய்ய செப்டம்பர் 20-ந் தேதி இங்கு கூடுமாறு எண்பத்தேழு நாடுகள் அழைக்கப்பட்டுள்ளன.

ஐ. நா. அங்கங்களாகவாவது, அதன் விசேட நிறுவனங்களின் அங்கங்களாகவாவது உள்ள இந்த அரசாங்கங்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, சர்வதேச சமாதான அணு சக்தி அமைப்பின் நகல் சட்டத்தை ஒப்புக்கொள்ளும், அல்லது திருத்தி அமைக்கும்.

ஜனுதிபதிஐஸன்ஹோவர் 1953 டிசம்பரில் ஐ. நா. பொதுச் சபையில் முதலில் குறிப்பிட்ட அமைப்பை அமைக்க, இரண்டரை ஆண்டுகளாக வேலை நடந்து வருகிறது. இந்த மகாநாடு அதற்காக இறுதியாகச் செய்யப்படும் காரியமாகும்.

1956 பிப்ரவரியில் பேச்சு வார்த்தை நடத்திய 12 நாடுகளும் வாஷிங்டனில் தொடர்ச்சியாகப் பலமுறை கூடி ஏப்ரல் 18-ந் தேதி அவை நகல் சட்டத்தின் திருத்திய பிரதியை ஒப்புக்கொண்டன.

செப்டம்பர் 20-ந் தேதி மகாநாட்டில் இந்த நிறுவனம் “உலக அமைதிக்கும் சுகாதாரத்துக்கும் செழிப்புக்கும் அணுசக்தி செய்யும் காரியங்களைத் துரிதப்படுத்தி விரிவுபடுத்த நாடும்” என்று எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

அணுசக்தியின் சமாதானப் பயன்களைக் குறித்து விஞ்ஞான, தொழில் நுட்பச்செய்திப் பரிவர்த்தனையை இந்த அமைப்பு வளர்க்கும்; விஞ்ஞானிகள் நிபுணர் பரிவர்த்தனைக்கும் இது ஊக்கமூட்டும். எரி பொருள்களும் கருவிகளும் எந்த இராணுவ நோக்கத்துக்கும் பயன் படாதவாறு உறுதியளிக்கக்கூடிய பாதுகாப்புகளையும் இந்த அமைப்பு நிலைநாட்டும்.

‘வேலை நிறுத்தம் செய்வோம்’!

இராணுவ தளவாடச் சாலையிலும், மற்ற இராணுவ நிறுவனங்களிலும் ஆட்குறைப்பு செய்யப்படும் என இந்திய அரசாங்கப் பாதுகாப்பு மந்திரி அறிவித்ததை வாபஸ் பெறவேண்டும் என்றும், இல்லையென்ருல், இந்தியா பூராவும் இராணுவ தளவாட நிலயங்களில் பணிபுரிவோர் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்றும் அகில இந்திய இராணுவ தளவாட ஊழியர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கைக்கெடிகார உற்பத்தி

சுவிஸ்நாட்டுடன் ரஷ்யா போட்டி?

லண்டன், செப். 12—

கைக்கெடிகாரம், பெரிய கெடிகாரம் இவற்றின் உற்பத்தி ரஷ்யாவில் வேகமாக அதிகரித்துவருகிறதாம்.

இந்த வேகம் நீடிக்குமானுல், கெடிகார உற்பத்தி, ஏற்றுமதி இவற்றில் பிரதானமான நாடாக விளங்கும் சுவிட்சர்லாந்தின் நிலை பாதிக்கப்படும் அபாயமிருக்கிறதாம்.

ரஷ்யாவில் ஏற்கனவே ஆண்டொன்றுக்கு 2·2 கோடி கெடிகாரங்கள் உற்பத்தியாகின்றனவாம். இது இன்னும் சில ஆண்டுகளில் 3 கோடியாக உயருமாம்.

இந்தத் தகவலை, அண்மையில் ரஷ்யா சென்று 10 நாட்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள ‘இங்கர்சால்’ பிரிட்டிஷ் கெடிகார நிறுவனத்தின் உதவி நிர்வாகத் தலைவர் ஒருவர் வெளியிட்டிருக்கிறுராம்.

நாளுக்கு நாள் விரிவாகும் பக்ராநங்கல் திட்டம்

செலவு மதிப்பீடு ரூ. 173 கோடியாக உயர்ந்துள்ளதாம்!

புதுடில்லி, செப். 12—

பக்ரா நங்கல் திட்டத்திற்கு 1947-ல் 75 கோடி ரூபாய் தான் செலவாகுமென மதிப்பிடப்பட்டது ஆனுல் இப்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 173 54 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம். இந்த மதிப்பீடு கூட இறுதியானது அல்லவாம், மேலும் மேலும் திட்டம் விரிவாக்கப்படும்போது, செலவு மதிப்பீடும் அதிகரிக்குமாம்.

இந்தத் தகவல் மக்கள்சபையில் தரப்பட்டிருக்கிறது.

இந்திய இரயில்வேக்கள், 1955-56-ம் ஆண்டில் மொத்தம் ரூ 76 86,000-க்கு கதர் துணி வாங்கின; அதற்குமுந்திய ஆண்டில் ரூ. 10,13,000-த்திற்கு வாங்கப்பட்டிருக்கிறது.

செய்திச் சுருள்

★

ஈக்கு, தும்புத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு

தூத்துக்குடி ஈக்கு,தும்பு தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு கேட்டு முதலாளிகளுக்கு எழுதிக் கேட்டதில் இதுவரை முதலாளிகள் சங்கம் பதில் எழுதவில்லை. ரூபாய்க்கு ஒரு அணு வட்டக் காசு பிடிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கண்டித்துத் தொழிற் சங்கத்தின் சார்பாகப் பெண்கள் பெருவாரியாக இருக்கும் பகுதிகளான சுப்பிரமணியபுரம், சில்வர்புரம், மூன்ருவது மைல் (புதுக்குடி) கிராமங்களில், மேற்படி சங்கத் தலைவர் தோழர் எஸ். நடராசன், செயலாளர் எஸ். ஏ. முருகானந்தம், மற்ற சங்கத் தொழிலாளர்களுடன் கூட்டங்கள் நடத்தித் தொழிலாளர்களைத் திரட்டி முதலாளிகளைச் சந்திப்பது என்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

★

கட்டுத் தொழிலாளர்கட்குக் கூலி உயர்வு

2—9—56-ல், கட்டுத் தொழிலாளர் கூலித் தகராறு காரணமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டு மேற்படி சங்கத் தலைவர் தோழர் எஸ். நடராசன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தலைவர் அவர்கள் உடனே சம்பந்தப்பட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, ஏற்கனவே கொடுக்கப்பட்டுவந்த கூலியைவிட அதிகமாக ரூ. 2-8-0 கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. வேலை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

★

துறைமுகத் தொழிலாளர் கூலி நிர்ணயம்

4-9-56-ல் தூத்துக்குடி துறைமுகத்திற்கு 85,000 மூட்டை உரம் கொண்டுவந்த கப்பலில், துறைமுக, கடைத் தொழிலாளர்கள், கூலி நிர்ணயம் செய்யாமல் மூட்டைகளைத் தொடமாட்டோம் என்று கூறி வேலைசெய்ய மறுத்துவிட்டார்கள். இத்தகவல் மேற்படி தொழிலாளர் சங்கத்திற்குக் கிடைத்ததும் சங்கத் தலைவர் தோழர் எஸ் நடராசனும் செயலாளர் தோழர் ஞா. சுடலைமுத்தவும் விரைந்து, துறைமுகத்திலுள்ள தொழிலாளர்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு காண்டிராக்டரிடம் கலந்துபேசி, 100 மூட்டைக்கு ரூ. 5-8-0 வீதம் கொடுத்துவிட வேண்டுமென்றும், சமீபத்திலுள்ள ‘ஏ’ செட்டில் மூட்டைகளை இறக்கி வைப்பதென்றும், மாலை 6 மணிக்கு மேல் வேலைசெய்வதில்லை என்றும் 6 மணிக்குமேல் வேலை செய்ய வேண்டுமென்ருல்இரட்டிப்புச்சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பேசி முடிவு செய்யப்பட்டு, சங்கத் தலைவரும் காண்டிராக்டரும் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தனர். அதன் பின்னர் தொழிலாளர்கள் ஒழுங்காக வேலைக்குச் சென்ருர்கள்.

மாநிலத் தொழில் அமைச்சருடன் பேட்டி

தூத்துக்குடி, செப். 14—

5—9—56 ல் சென்னை மாநில தொழில் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இங்கு வந்திருந்தபோது தூத்துக்குடி ‘சங்குகுளி’ சங்கப் பிரதிநிதிகள் தம்மைவந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்படி தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். நடராசன், செயலாளர் ஞா. சுடலைமுத்து, துணைத்தலைவர் சந்தனராஜ் கீழ்க்கரை சங்குகுளித் தொழிலாளர் சங்கத் தலைவர் சுந்தரம் ஆகிய நால்வரும் பேட்டி அளித்தார்கள். நடக்க இருக்கும் தொழில் காலத்தில், சங்கம் கொடுத்திருக்கும் விகிதத்தை விவாதித்து முடிவு சொல்லாது, அமைச்சர் சென்னை சென்று இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து முடிவு சொல்வதாகக் கூறி தமது பேச்சு வார்த்தையை முடித்துக்கொண்டார்.

★

கண்டனப்பொதுக்கூட்டம்

8—9—56-ல், பொதுமக்களுக்கு வினியோகம் செய்வதற்கென சர்க்கார் கொடுத்திருக்கும் பச்சரிசி புழுங்கல் அரிசி ஆகியவற்றைத் திருநெல்வேலி மாவட்ட மத்திய ஸ்டோர் நிர்வாகிகள் நெல்லை மாவட்டத்திலிருந்து அகற்றி மலையாளப் பகுதிக்குக் கொண்டுபோய் அதிக விலைக்கு விற்பதைக் கண்டித்து, தூத்துக்குடி போலீஸ் ஸ்டேஷன் முன்னுல் சோஷலிஸ்டு கட்சிச் செயலாளர் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். நடராசன், முனியசாமி, மற்றும் பல தோழர்கள் பேசினர் சர்க்கார் உடனே நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. (ந தி)

எமனேசுபுரம் அண்ணு படிப்பக ஆண்டு விழா

9—9—56 மாலை 6 மணிக்கு, பரமக்குடி தி. மு கழக உட்கிளையான எமனேசுபுரம் அண்ணு படிப்பக 2-ம் ஆண்டு விழா, படிப்பகத்தின் முன்பாக தோழர் எம். வி இராசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. சீனுவாசன், ஆர். எஸ். பிரகாசம், சி. வி. முத்துச்சாமி, பாண்டியன் ஆகியோர் படிப்பக வளர்ச்சி பற்றியும் நாட்டின் அரசியல், சமுதாய நிலைகள் பற்றியும் பேசினுர்கள். இறுதியில் இவ்வூரில் ஒரு பிரசவ மருத்துவமனை கட்ட வேண்டுமென்றும், கைநெசவாளர் பாதிக்கப்படுவதால் விசைத்தறி கொண்டுவரும் எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்றும் அரசியலாளரைக் கேட்டுக்கொண்டும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மாநில, மத்திய சர்க்கார்கள் காட்டும் அலட்சியத்தைக் கண்டித்தும், மற்றும் சில தீர்மானங்களும்நிறைவேற்றப்பட்டன

கைத்தறி நெசவாளர் சங்கத் துவக்க விழா

4—9—56 மாலை செயங்கொண்டத்தைச் சார்ந்த செங்குந்தபுரத்தில் கைத்தறி நெசவாளர் சங்கத் துவக்க விழா திரு. சி. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. க. இரத்தினசாமி தொழிலாளர் சங்கத்தைத் துவக்கிவைத்தார். தி. மு. கழகத் தோழர் ஆ. வேலாயுததாசன் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வேதனையையும் குமுறலையும் விளக்கி, விசைத் தறியால் நெசவாளர் வாழ்வு சீரழியும் என்பதை சுட்டிக் காட்டி, ‘நூலில்லை; போதிய வருமானமில்லை; தேங்கிய துணி விற்க விற்பனை நிலயங்கள் போதவில்லை’ என்ற நிலை மாற வரப்போகும் தேர்தல் காலத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்ருர்.

அடுத்துத் தோழர் அ. க. சே. இரகுல் தொழிலாளரும் கடமையும் என்னும் பொருள் பற்றிப் பேசினுர்.

563 சோசலிஸ்டுகள் கைது

பீகாரில் சோஷலிஸ்டுகள் 21 நகரங்களில் நடத்திவரும் போராட்டத்தில் மொத்தம் 2,470 சோஷலிஸ்டுகள் கலந்துகொண்டிருப்பதாகவும், இன்றுவரை 568 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. வி. ஜி. இராசு கைது

சோஷலிஸ்டு கட்சியின் பிரமுகர்களில் ஒருவரான பி. வி. ஜி. இராசுவும், அவருடன் இருந்த 53 சோஷலிஸ்டுத் தொண்டர்களும் ஐதராபாத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

திருமணங்கள்

9—9—56ல் பூத்துறை தி. மு கழகத் தோழர் என். இராசமாணிக்கம்—தோழியர் குப்பம்மாள் திருமணம் தோழர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சு. பெருமாள், முருகையன், நக்கீரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணநினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி - பொறுப்பாளர்.

* * *

9—9—56ல் மதுரை கீழமாசி வீதி தோழர் சொ. தருமராசன்—தோழியர் பிரகாசம் திருமணம் அருப்புக்கோட்டை மணமகள் இல்லத்தில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

26—8—56 காலை 9 மணிக்கு, சென்னை—மூலக்கொத்தளம் சிதம்பர நகரில் தோழர் என். ஏழுமலை—தோழியர் வள்ளியம்மை திருமணம் தோழர் ஆர். பலராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. ராமலிங்கம், மாணிக்கராஜ், வி. நடராசன், டி. பி. போகேந்திரன் தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

26—8—56 காலை 9 மணிக்கு, சேவூர் (வ ஆ) தி. மு. கழகத் தோழர் கே. நடேசன்—தோழியர் எல்லம்மாள் திருமணம் தோழர் ஏ. எல். சி. கிருட்டினசாமி தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி வி. ஏ. இளஞ்செழியன் பேசினுர். கிளைக் கழகச் சார்பில் வீ. இ. செயராமன் வாழ்த்துரை வாசித்தளித்தார்.

* * *

9—8—56 காலை $5\frac{1}{2}$ மணிக்கு, வட்டத்தூரில் திரு. சிங்காரவேல் தலைமையில், தோழர் பொ. கலியபெருமாள்—தோழியர் து. ஜானகி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், சின்னதுரை வாழ்த்துரை வழங்கினர்.

* * *

9—9—56 காலை 9 மணிக்கு, குணியமுத்தூர் தி. மு. கழகத் தோழர் வெ. ஆறுமுகம்—தோழியர் அரங்கநாயகி திருமணம் ஊராண்மைக் கழகத் தலைவர் எம். சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோவைச் செழியன், தங்கமாணிக்கம், மு. இராமநாதன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர்.

* * *

19—8—56 காலை $7\frac{1}{2}$ மணிக்கு, கோவை ஆர். எஸ். புரத்தில் தோழர் இரா. வைத்தியநாதன்—தோழியர் ஜெயலட்சுமி திருமணம் தோழர் குருசாமி தலைமையில் நடந்தது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் கோவைச் செழியன், சி. டி. தண்டபாணி ஆகியோர் பேசினர்.

* * *

7—9—56 அன்று திண்டுக்கல்லில் தோழர் போசராசன்—தோழியர் விரதசாரனி திருமணம் தோழர் க. வேலாயுதனுர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. சுப்பையா, என். முத்து, இராசையா ஆகியோர் பேசினர்.

அமைதி நிலைநாட்ட!

140 பேர் கொல்லப்பட்டனர்!

சைகோன் கலவரத்தை ஒடுக்கி அமைதியை உண்டாக்கும் முயற்சியில் வியட்நாம் இராணுவம் இதுவரை 140 பேரை சுட்டுக்கொன்றும், 36 பேரைக் காயப்படுத்தியும் 834 பேரை கைது செய்திருப்பதாக பாரிஸ் செய்தி என்று கூறுகிறது.

ஆப்கன் கைதி உண்ணாவிரதம்!

சர்தார் இதயதுல்லாகான் என்ற ஆப்கானியர் சென்ற ஆண்டு பாகிஸ்தானில் இருந்து அனுமதியின்றி இந்தியாவிற்குள் நுழைந்ததற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். தற்போது அவர் 'வெளிநாட்டு அரசியல் கைதிக்கு அளிக்கப்படவேண்டிய மதிப்புடன் தான் நடத்தப்பட வேண்டுமென்று' கோரி பூனா மருத்துவ விடுதியில் உண்ணாவிரதம் இருக்கிறாராம்.

மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஏமாற்றம்!

மத்திய அரசாங்க ஊழியர்களுக்குத் தற்பொழுது அளிக்கப்படும் கிராக்கிப் படி அளவை உயர்த்த முடியாதென மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

பணிவன்புடன் அழைக்கிறேன்." இவ்வாறு, 10-9-56-ல் செங்குன்றம்—கிராண்ட் லைனிலுள்ள வ.உ.சி. மன்ற 4-ம் ஆண்டு விழாக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

டாக்டர் சி. நடேசனார் மனைவியார் மறைவு

டாக்டர் சி. நடேசனாரின் இல்வாழ்க்கைத் துணைவியாராகிய திருமதி நாயகம் அம்மாள் (வயது 62) 11—9—56 இரவு 9-30 மணிக்கு, சென்னை—சேப்பாக்கம் பெரிய தெருவிலுள்ள டாக்டர் சி. நடேசனார் இல்லத்தில் இயற்கை எய்தினார். 12—9—56 இரவு 9 மணிக்கு சவ அடக்கம் நடைபெற்றது. அன்னார் இயற்கையெய்தியமை குறித்து, சென்னை 40-வது வட்ட தோழமைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. நமது அனுதாபமும் உரித்தாகுக.

(ஆ.-ர்.)

திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டங்கள்

★

மதுரை:

மதுரை நகரில் செப். 16-ந் தேதியன்று திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்.

அன்று பகல், தோழர் மு. கருணாநிதி அவர்கள் நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் கழகக் கொடியேற்றுவிப்பார்.

மாலையில் தியாகராயர் படிப்பகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

இரவு 7-மணிக்கு திலகர் திடலில் நடைபெறும் கூட்டத்தில், அண்ணா, மு.கருணாநிதி, எஸ். முத்து முதலியோர் பேசுவார்கள்.

° ° °

16—9—56 காலை 10 மணி அளவில், மதுரை—மேல மாசி வீதி, புதுமைப் பாசறையின் சார்பில் நடைபெறும்; தோழர் மு. கருணாநிதி அவர்கள் கொடியேற்றி வைப்பார்; தோழர் எஸ். முத்து அவர்கள் குழந்தைகளுக்குப் பால் வழங்கும் விழாவினைத் துவக்கிவைப்பார்; இரவு 10 மணிக்கு தோழர் அருணாசலம் அவர்கள் தலைமையில் தோழர் இராசரத்தினம் குழுவினர் இன்னிசை வழங்குவர்.

எலப்பாக்கம்:

17—9—56 மாலை 5 மணி அளவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டமும், கொடி ஏற்று விழாவும் நடைபெறும்; கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

திருவில்லிபுத்தூர்:

17—9—56 மாலை 6-30 மணி அளவில், நாயர் சதுக்கத்தில், தோழர் என். எஸ். இளங்கோ பேசுவார்.

தூத்துக்குடி:

16—9—56 மாலை 6 மணியளவில், தூத்துக்குடி சந்தனமாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் எம்.எஸ். சிவசாமி தலைமையில், தோழர்கள் என். எஸ். இளங்கோ, கே. வி. கே. சாமி பேசுவார்.

கோவை வட்டம்:

15—9—56 மாலை கோவை ஆர். எஸ். புரம் (11-வது வார்டு) கிளைக் கழகச் சார்பில், தோழியர் சத்தியவாணி-முத்து பேசுவார்.

15—9—56 மாலை போத்தனூரில் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

16—9—56 மாலை 4-வது வார்டு இராமநாதபுரம் கிளையின் சார்பில் தோழர் க. அன்பழகன் பேசுவார்.

16—9—56 மாலை இருகூரில் தோழர் சிற்றுவி-சுப்பிரமணியம் பேசுவார்.

16—9—56 மாலை 12-வது வார்டு கிளைக் கழகச் சார்பில், தோழியர் சத்தியவாணி-முத்து உரையாற்றுவார்.

17—9—56 மாலை நஞ்சுண்டபுரத்தில் தோழர் சிற்றுவி-சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவார்.

17—9—56 வெள்ளலூரில் தோழியர் சத்தியவாணி-முத்து சொற்பொழிவாற்றுவார்.

வேலூர்:

16—9—56 மாலை 6 மணிக்கு, தோழர் அ. பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. எல். சி. கிருட்டிணசாமி, வே. அ. இளஞ்செழியன், வே. சு. பாண்டியன், அ. கருத்தோவியன் ஆகியோர் பேசுவர்.

முக்கூடல்:

17—9—56 இரவு 8 மணிக்கு, காந்தி திடலில், பாண்டியனார் அரங்கில், தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெறும்; தோழர் ஈ. வெ. கி. சம்பத் பேசுவார்.

வரகனேரி:

17—9—56 மாலை 6 மணிக்கு, சென்ட்ரல் டாக்கீஸ் பின்புறத்தில், தோழர் வி. கே. எம். சாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் க. அன்பழகன், அம்பில்-தர்மலிங்கம், எம். எஸ். மணி, என். அருணாசலம் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

பேரையூர்:

(மதுரை மாவட்டம்)

16—9—56 மாலை 6 மணிக்கு அரசமரத் திடல்

தலைவர்: கே. கே. முத்து

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

எம். ஏ. இரசாக்

க. ம. வ. நடராசன்

திருப்பூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

16—9—56 காலை 10 மணிக்கு நகர தி. மு. கழகப் புதிய பொது உறுப்பினர்களின் முதற்கூட்டம் 'டிராவலர்ஸ் பங்களா'வில் நடைபெறும்.

ஆய்வுக்கு வருபவை:—நகர தி. மு. க.-வின் செயற்குழுவில் சமீபத்தில் ஏற்பட்ட காலியான மூன்று இடங்களுக்குத் தேர்தல்; புதிய உறுப்பினர் சீட்டுக்கள் வினியோகித்தல்; நகர தி. மு. க-வின் எதிர்கால நடவடிக்கைகளும் வளர்ச்சியும்.

சென்னை—17-வது வட்ட தி. மு. க. செயற்குழு

16—9—56 காலை 10 மணிக்கு கழக மனையில் (17, மாணிக்கச் செட்டித் தெரு, குளை) செயற்குழு கூடும்; அதுபோது கழக வரவு-செலவு; படக்காட்சி வரவு-செலவு; திராவிடநாடு பிரிவினை வாரம்; விலக்கல் கடிதங்கள் பரிசீலித்தல் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை—16-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

16—9—56 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கழக வளர்ச்சிக்குநிதி சேகரித்தல்; வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்தல்; கழக இரண்டாம் ஆண்டுத் துவக்க விழா பொதுக்கூட்டம் நடத்துதல், செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்—ஆகியவை ஆய்வுக்கு வரும்.

நெல்லை நகர தி. மு. கழகக் கிளைத் தேர்தல்

"16—9—56 ஞாயிறு காலை 11-மணிக்கு, நெல்லை நகர தி. மு. கழகக் கிளைத் தேர்தல் நெல்லை-சந்திப்பு 'கிரீன் லாட்ஜ்' ஓட்டலில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன். உறுப்பினராகச் சேர்ந்த தோழர்களுக்கு அன்று காலை 8-மணியிலிருந்து 'கிரீன் லாட்ஜில்' உறுப்பினர் சீட்டுக்கள் வழங்கப்படும்"

என்று நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற் குழுக் கூட்டம்

"16—9—56 காலை 10 மணியளவில், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், நெல்லை சந்திப்பு 'கிரீன் லாட்ஜ்' ஓட்டலில் நடைபெறும், மாவட்டக் கழக உறுப்பினர்களும், கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். விவரம் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ளது; அதில் உள்ள விவரங்களை முன்கூட்டித் தவறாது அனுப்ப வேண்டுகிறேன்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்கள் அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட கழகத் தோழர்களுக்கு:

"மதுரை நகரில் 16—9—56 அன்று திராவிட நாடு விடுதலை (பிரிவினை) நாள் கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்ளுகிறார்கள்.

"தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டி வைத்துள்ள மதுரை மாவட்டக் கழகத் தோழர்களும் அனுதாபிகளும் அன்று மதுரை கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் நிதியை வழங்கி விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

பாரதி விழா

15—9—56 மாலை 6-30 மணியளவில், சென்னை - இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், மேற்படி விழா, கல் மண்டபம் நகராண்மைக் கழக ஆண் பள்ளியில், திரு. அ. ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் த. சே. உமாபதி, ஐ. மாயாண்டி பாரதி, அ. முனுசுவாமி ஆகியோர் பேசுவர்.

தாளமுத்து — நடராசன் படிப்பக ஆண்டு விழா

16—9—56 மாலை 6 மணிக்கு, திண்டுக்கல் தாளமுத்து-நடராசன் படிப்பக முதலாவது ஆண்டு விழா, அழகிரி திடலில், தோழர் எஸ். இளங்கண்ணன் தலைமையில் நடைபெறும்; தோழர் எ. சுப்பையா கொடியேற்று விழாவாற்றுவார்; தோழர் என். முத்து அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்; தோழர்கள் எம்.எஸ். இராமசாமி, பி. சமதர்மம், கே. இலட்சுமணன் ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

16—9—56 காலை 8 மணிக்கு, சென்னை - மூலக்கொத்தளம், பி. சுப்பராயன் பாடசாலையில், தோழர் க. அப்பாதுரை அவர்கள் தலைமையில், தோழர் வி. செ. சுப்பிரமணி—தோழியர் பொன்னம்மாள் திருமணம் நடைபெறும்; தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர்கள் ஏ. கே. வில்வம், எஸ். எஸ். தென்னரசு, போகேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

16—9—56 காலை 8 மணியளவில், கோயம்பேடு, அம்மன் கோவில் தெரு, எண் 75 இல்லத்தில், தோழர் எம். எஸ். மணி—தோழியர் எம். நீலாவதி திருமணம் தோழர் மா. இளஞ்செழியன் தலைமையில் நடைபெறும்; தோழர் கோ. வெற்றிவீரன் வாழ்த்துரை வழங்குவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

15-9-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை - முத்தியாலுபேட்டை முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் என். இராமதாசு தலைமையில் நடைபெறும். 'பொதுத் தேர்தலும் நாமும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

16—9—56 காலை 10 மணிக்கு, கோவை அழகிரி சொற்பயிற்சி மன்றத்தில் நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'விஞ்ஞானம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

16—9—56 காலை 9 மணிக்கு, சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றச் சார்பில், மன்ற அலுவலகத்தில் (17, திருப்பள்ளித் தெரு), தோழர் டி. ஆர். முத்துகிருட்டிணன் தலைமையில், 'புரட்சி வீரர்கள்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

நமது இன வரலாறு காண்பீர்! வீரமிக்க உணர்ச்சி பெறுவீர்!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் என்றும், அத்துடன் நாட்டை ஆளும் வழிவகை அற்றவர்கள் என்றும் ஆதாரங்களுடன் கூறுகிறேன்.

'எனவே, அந்த ஆரியரின் ஆதிக்கப் பிடிப்பிலிருந்து நம் தாயகம் விடுபட்டு, மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெற வீரர் வ. உ. சி-யின் பேரால் மன்றம் அமைத்துப் பணியாற்றிவரும் அஞ்சா நெஞ்சினரே அணிவகுப்பு அமைத்திட வாரீர் என்று உங்களை அன்புடன் அழைக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

"'இந்தக் காரியம் நம்மால் ஆகுமா?' என்று இழுப்புப் பேச்சு வேண்டாம்; நம்மால் ஆகாவிட்டால் வேறு யார்தான் இக்காரியங்களைச் செய்ய இருக்கிறார்கள்?

"கம்யூனிஸ்டுகளுக்கு இந்தப் பிரச்சினை சர்வ சாதாரணம்! ஏனெனில் அவர்கள் அகில உலக விவகாரங்களைப் பேசுவதற்கே நேரமில்லையென்று கருதுபவர்கள்!

"சோஷலிஸ்டுகளோ, 'வடநாடு—தென்னாடு என்று பேசுவது இந்திய ஒற்றுமையைப் பாழாக்கும்' என்று கருதி வருபவர்கள்!

"ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனின் உட்பிரிவுகளாய் இயங்கும் இம்மன்றத்தைப்போன்ற அமைப்புகளுக்கும் தவிர வேறு யாருக்கு அக்கறையிருக்கமுடியும்? வேறு யார்தான் நம் தாயகத்தின் விடுதலைப் பணியில் கவலை செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்? நம் தாயகத்தின் தன்மான வாழ்வைப் பற்றியும், அதுபோலவே பிற மாநிலங்களுடன்—ஏன் உலக நாடுகளுடன் நம் நாடு சமநிலையில்—தோழமையுடன் உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உயரிய கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம்தான் கொண்டிருக்கிறது.

"மற்ற கட்சிகளுக்கு இக்கொள்கை மிக மிகச் சாதாரணம்! எனவே, நாம்தான் நம் தாயகத்தை மீட்கும் பணியை வெற்றிபெறச் செய்யவேண்டும் — வெற்றி பெறத்தான் போகிறோம்; எனவே, நம்மால் முடியுமா என்ற இழுப்புப்பேச்சு வேண்டாம்!

"பாகிஸ்தான் பிரிவினைக்காகப் போராடிய மறைந்த மாவீரர் ஜின்னா அவர்களுக்கு முஸ்லீம் மக்கள் அனைவருமே ஆதரவு கொடுத்துவிட்டார்களா—இல்லையே! 'இது ஆகக்கூடிய காரியம்தானா?' என்று முஸ்லிம் தலைவர்களில் சிலர் கேலி பேசினர்! எனினும், அவர் தமது கொள்கையில் சிறிதும் சோர்வடையவில்லை; தொடர்ந்து போராடினார்—வெற்றியும் பெற்றார்!

"எனவே தோழர்களே! நமது இன வரலாற்றின் பெருமையைக் கண்டு, வீர உணர்ச்சிபெற்றுத் திரண்டெழுவீர்—வெற்றி பெறுவீர் என்று உங்களையெல்லாம்

(1-ம் கலம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.